## மாங்காடு நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை:– திருமதி. மு. ராணி. M.A.,

ந.க.எண்.733/2020/எப்1 நாள். 05.10.2024

**பொருள்:–** திட்ட அனுமதி – மாங்காடு நகராட்சி – மாங்காடு கிராமம் –நில அளவை எண்.765/29பி2சி, 765/29பி1, 389/2(பகுதி), 384, 398/2(பகுதி)397/2, 390 பகுதி 391, 380, 379, 392– ஆகிய எண்களில் உள்ள குடியிருப்பு கட்டிடம் கட்ட வரைபட அனுமதி கால நீட்டிப்பு செய்து வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:–**

1. திருவாளர்.நிர்வாகிமேலாளர், சைபர் சிட்டி பில்டர்ஸ் அன்டு டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் என்பவரின் விண்ணப்பம் நாள்.27.01.2023.
2. நகரமைப்பு ஆய்வர் அவர்களின் பரிந்துரை குறிப்பு நாள்.08.01.2024
3. இதே எண்ணிட்ட கேட்பு அறிவிப்பு நாள்.08.01.2024.
4. திருவாளர்.நிர்வாகிமேலாளர், சைபர் சிட்டி பில்டர்ஸ் அன்டு டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் என்பவரின் விண்ணப்பம் நாள்.30.07.2024.
5. மாங்காடு நகராட்சி கடித ந.க.எண்.733/2020/எப்1, நாள்.09.08.2024.
6. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதம் எண்.EC/C–I/11317/2024 நாள்.25/09/2024.

************

**உத்தரவு:–**

பார்வையில் 6–ல் காணும் தெரிவித்துள்ளபடி with reference to your 3rd cited it is informed that the Government H&UD Department have extended the duration of planning permission by 2 years for the planning permission approval obtained from 01/09/2014 to 31/03/2022. In view of the above, the planning permission issued in the reference 1st cited to valid till 08/12/2027 என்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் கேட்பு அறிவிப்பில் தெரிவித்துள்ள படி உரிய கட்டணம் ரூ.15352800/– நகராட்சி கருவுலத்தில் செலுத்தப்பட்டது. (ரசீது எண்.180/001/01/24–25/0004434, நாள்.05.10.2024).

CMDA issued Planning Permission in PP No.C/PPMSB/53 (S1 to S69)/2017, Dated.09.12.2017 in Planning Permit No.11181 in letter No.C3(s)/4665/2017 dated.09.12.2017.

பார்வை 6–ல் கண்டுள்ள கடிதத்தின் படி கட்டிட அனுமதி காலம் **08.12.2027** வரை நீடித்து வழங்கப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்திலும் பின்பக்கத்திலும் மற்றும் இரு பக்கங்களிலும் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும். மேலும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கான ஆணையருக்கு எடுத்து வழங்கப்பட்டுள்ள வங்கி வரைவோலை தொகையில் ரூ.15352800/– தணிக்கை நடைபெறும் காலகட்டத்தில் நிலுவைதொகை இருப்பின் தங்களால் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தபத்திரத்தில் சொல்லப்பட்டதன் அடிப்படையில் தொகைகட்ட வேண்டும்.

2. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமிப்பு செய்வது கூடாது.

3. கட்டிடவேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ நகராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

Scanned with OKEN Scanner

4. கட்டிட வேலை துவங்குவதற்கு முன்னால் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளுக்கான வடிவமைப்புகளுக்கு உரிய அனுமதியை சென்னை குடிநீர் வாரியத்திடமிருந்து பெறப்படடு நகராட்சிக்கு சமர்பிக்க வேண்டும்.

5. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த் தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும் . குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிடமுனைவரே அதைபராமரிக்கவேண்டும்.

6. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழைநீர் மழைநீர் சேகரிப்பு நடவடிக்கை குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருக்கும் ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு உறியதாகவும் வளச்சிக்கட்டுபாடு விதிகளுக்கு முரணாணதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்

7. கிணறுகள் மேல்நிலை தொட்டிகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகள் சுகாதார முறையில் உறுதியாக மூடப்பட்டு கொசு தொல்லைகள் இல்லாமல் பார்த்து கொள்ள வேண்டும்.

8. சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் விண்ணப்பதாரர் கடைபிடிக்க வேண்டும்.

9. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோஅல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஆணையருக்கு விண்ணப்பம் செய்து ஆணை பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

10. கட்டிடம் கட்ட ஆணை பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி ஆணையை ரத்து செய்ய ஆணையருக்கு உரிமை உண்டு.

11. புதியதாக கட்டப்படும் கட்டிடத்தில் மழை நீர் சேகரிப்பு தொட்டி தவறாமல் அமைத்திடல் வேண்டும். மேலும் ஒப்புறுதி பத்திரத்தின்படி அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டவாறு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்ட பின்னரே சொத்துவரி விதிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

12. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொதுச் சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்திருத்தல் அவசியம்.

13. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புரப்படுத்தும் வகையில் வடிகால்களும் கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

14. கட்டிட வேலை முடிந்த பின்பு 15 தினங்களுக்குள்ளாக ஆணையருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

15. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் கட்டிட முடிவு சான்று பெற்ற பின் இந்நகராட்சியில் நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

M. [signature] /10/24

**ஆணையாளர்,**
**மாங்காடு நகராட்சி,**

[signature] 5/10/24

**<u>பெறுநர்</u>**

திருவாளர்.சைபர்சிட்டி பில்டர்ஸ் அண்டு டெவலப்பர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
எண்.123/1 மாங்காடு குன்றத்தூர் மெயின்ரோடு,
மாங்காடு, சென்னை–600122.

Scanned with OKEN Scanner